# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S.No. 174 / 2023

## CNR.No.TNCB19000

Date:07.10.2025 DW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கலைமுருகன் | **வயது** | 57 |
| **த/பெ** | சோமசுந்தரம் | **வட்டம்** | அரந்தாங்கி |
| **விலாசம்** | கலக்கமங்கலம் | **மாவட்டம்** | புதுக்கோட்டை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 07th October 2025

பி.வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். 19 ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் கண்டுள்ள விபரம் எனக்கு தெரியும். தாவா சொத்தை நான் வாங்குவதற்கு முன்பு வழக்கறிஞரிடம் கருத்துரை வாங்கி இருக்கிறேனா என்றால் வாங்கியிருக்கிறேன். அந்த கருத்துரையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கருத்துரை வாங்காததால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்து சம்பந்தமாக வங்கியில் கடன் எதுவும் வாங்கவில்லை, நான் வங்கியில் கடன் வாங்க முயற்சி செய்தேன் என்றும் என்னிடம் உரிய தரப்பினரிடமும் வாதியிடமும் கையொப்பம் பெறாமல் கடன் வாங்க முயற்சி செய்ததால் அதை வங்கி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலம் 2 வது பக்கம் 3 வது பத்தியில் தாவா சொத்து சம்பந்தபட்ட வாரிசுகளை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான்.

தாவா சொத்து சம்பந்தபட்ட வாரிசுகள் யார் யார் என எனக்கு தெரியாமல் வாங்கியுள்ளதால் நான் கிரையம் பெற்ற தாவா சொத்து சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை வாங்காமல் திருப்பி

அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் ஊருக்கு சென்று விட்டேன். நான் அறிவிப்பை வாங்காமலேயே பதில் அறிவிப்பு அனுப்பி இருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிவிப்பை வாங்காமலேயே அந்த அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு கிரையம் கொடுத்தவர் தகவல் சொன்னார். ***வா.த.சா.ஆ.30*** வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் 4 வது பக்கத்தில் 5 வது பத்தியில் தாவா சொத்து திருமலைக்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பதை தவிர மற்ற சங்கதிகள் அனைத்தும் பொய் என்று சொல்லி இருக்கிறேன் என்றால் ஞாபகம் இல்லை. சாட்சியிடம் வா.த.சா.ஆ.30 ஐ காண்பித்து கேட்டதற்கு வாதியின் உறவு முறை பற்றி தெரியாது என்று சொல்கிறார்.

நான் வழக்கறிஞரிடம் சொல்லி வா.த.சா.ஆ.30 வழக்கறிஞர் அறிவிப்பை எனது வழக்கறிஞர் அனுப்பி வைத்தார் என்றால் சரிதான், எனது பதில் அறிவிப்பிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் வாதியின் உறவு முறை பற்றி தெரியும் என்று சொல்லி விட்டு தற்போது தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.30 வழக்கறிஞர் அறிவிப்பில் தாவா சொத்து திருமலைக்கவுடருக்கு பாத்தியப்பட்டது என சொல்லிவிட்டு தற்போது ஞாபகம் இல்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி க.ச.எண்.484/1, 485/1 மற்றும் 469/1 ஆகிய பூமியில் பாகம் கேட்டு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ***பி.வா.சா.ஆ.2*** ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ல் தாவா சொத்து குறித்து எந்த விதமான குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. ***பி.வா.சா.ஆ.3*** ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ல் தாவா சொத்து குறித்து எந்த விதமான குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல.

நான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றும் அதனால் தான் தாவாசொத்தை பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது சுவாதீனத்தில் உள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ***பி.வா.சா.ஆ.4,5,6*** ஆகிய ஆவணடங்களுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ன் உரிமையாளர் பெயர் திம்மப்பகவுடர் மகன் சுப்பையகவுடர் என உள்ளது என்றால் சரிதான். ஆனால் உறவு முறை தெரியாது. நான் வழக்கறிஞரிடம் கருத்துரை கேட்டபோது வாதியின் உறவு முறை பற்றி

சொல்லவில்லை , நான் கருத்துரை வாங்கவில்லை என்றும் அவ்வாறு வாங்கி இருந்தால் உறவு முறை பற்றி தெரிந்து இருக்கும் என்றால் சரியல்ல. நான் சொத்தை வாங்குபவர் என்பதால் சொத்தை விற்பவரின் உறவு முறை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8, 9 ஆகிய பட்டா ஆவணங்களை வைத்து உரிமையாளரை தீர்மானிக்க முடியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 மாசு கட்டுப்பாட்டு வாரிய உத்தரவினை வைத்து உரிமையாளரை தீர்மானிக்க முடியாது என்றால் சரியல்ல.

18 ஆம் பிரதிவாதி ஆர்.கே.செல்வகுமாரும் ஜடையபாளையம் ஊராட்சி மன்ற தலைவரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆர்.கே.செல்வக்குமாருமான 18 ஆம் பிரதிவாதியும் நானும் சேர்ந்து தான் பதிலறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் சேர்ந்து ஒரே பதிலறிவிப்பு அனுப்பி இருந்தால் அது சட்ட படி தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2, 33, 37, 38 ஆகிய ஆவணங்களை பற்றி எதிர்வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட ஆவணங்களை பற்றி குறிப்பாக மறுத்து தெரிவித்திருக்கிறேன் என்றால் அது பற்றிய விபரங்கள் எனக்கு தெரியவில்லை.

வா.சா.ஆ.2, 33, 37, 38 ஆகிய ஆவணங்களில் வாதிக்கு தான் தாவா சொத்தில் உரிமை உள்ளது என இருப்பதால் அது பற்றி குறிப்பாக மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் அந்த ஆவணங்களை பற்றி எனக்கு தெரியாது. 13 ஆம் பிரதிவாதி பழனிச்சாமியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.30 பதிலறிவிப்பை பழனிச்சாமியும் நானும் சேர்ந்து அனுப்பி வைத்தோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-10 ல் கண்டுள்ள கலவை இயந்திரம் அமைத்ததாக சொல்லியுள்ளது சம்பந்தமாக பஞ்சாயத்தில் அனுமதி பெற்றேனா என்றால் வாங்கியிருக்கிறேன். அனுமதி வாங்கும்போது பஞ்சாயத்து தலைவரை எனக்கு தெரியும்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.10.07 18:41:20 +0530

சார்பு நீதிபதி.

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.